தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 9 இதழ் : 7 மே – 2013







# Rev. வில்சன் சங்காடா

## நகரேலா, குஜராத்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் வில்சன் சங்காடா. நான் குஜராத் மாநிலம், தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ள பாரேவா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நாங்கள் சி.என்.ஐ. சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். ஆனால் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாக இருந்தோம். நான் அனைத்துவிதமான கெட்டப் பழக்கங்களுக்கும் அடிமைப்பட்டிருந்தேன்.

ஒரு சமயம் ஜாலோத்தில் நடைபெறுகின்ற ஷாலோம் கூட்டங்களைப் பற்றியும், சுதேச ஊழியர்களைப் பற்றியும் கேள்விப்பட்டு, கூட்டங்களில் கலந்து கொண்டேன். வாரந்தோறும் தவறாமல் கூட்டத்தில் பங்கு பெற்றேன். நான் வேதத்தினை தொடர்ந்து வாசிக்க சத்தியம் எனக்கு விளங்கிற்று. அனைத்துப் பாவங்களையும் விட்டுவிட்டு கிறிஸ்துவுக்காக வாழ ஆரம்பித்தேன். கிறிஸ்தவப் பாடல்களைப் பாடவும், டோலக் அடிக்கவும் தேவன் எனக்கு கிருபை கொடுத்தார். மேலும் எனது வீட்டில் எனது பெற்றோரையும் இக்கூட்டத்தில் பங்கு பெற அழைத்துச் சென்றேன். என் தகப்பனாரும் பாவத்தில் இருந்து விடுதலை பெற்றார்.

மேலும் எனக்கு குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தது. ஆகவே எனது மனைவியையும் கூட்டத்திற்கு அழைத்து வந்தேன். தேவன் எங்கள் ஜெபத்தினைக் கேட்டு குழந்தை பாக்கியத்தினைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை! மேலும் தேவன் எனக்கு எனது சொந்த ஜனத்தினைக் குறித்த ஆத்துமப் பாரத்தினைக் கொடுத்தினால், ஷாலோம் சார்பில் 1998ம் ஆண்டு இராஜஸ்தானிலுள்ள பிலதெல்பியா என்ற வேதாகமப் பள்ளியில் ஒரு வருடம் பயிற்சி பெற்று ஊழியத்தை ஆரம்பித்தேன். மத்தியப்பிரதேசத்தில், பிட்டோல், கேடி ஆகிய பகுதிகளில் ஊழியம் செய்து ஐந்து சபைகளையும், ஐந்து ஊழியர்களையும் எழுப்ப தேவன் கிருபை செய்தார். 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக தேவக் கிருபையால் பிரதிஷ்டை செய்யப்பட்டு தற்போது நகரேலா கிராமத்தை மையமாக வைத்து கர்த்தருக்கென்று ஊழியம் செய்து வருகின்றேன்.

பின்பு சாப்ரி, நகரேலா, கடோயி சபைகளை எழுப்பவும் தேவன் கிருபை செய்தார். கடந்த 18.04.2010 அன்று எங்கள் சபையில் வைத்து சுதேச ஊழியர் சகோ. பத்தியா கராடியா (மகுடி, ம.பி) அவர்களை குடும்பமாக பிரதிஷ்டை செய்து மாதந்தோறும் ஜெபித்து சபையாக தாங்கி வருகிறோம். எனக்காக, குடும்பத்திற்காக, எனது பிள்ளைகள் முக்தி, கிருபா, எஸ்தர், சாமுவேல் ஆகியோருக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Prof. C.S. Christopher Family,** Palayamkottai.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

***ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள்!***

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், ஆதரவாளர்களின் தியாகம் நிறைந்த உதவியினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெறுகிறது. குறிப்பாக கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் பணித்தளத்தில் ஊழியங்களை நிறைவேற்ற தேவன் தந்த கிருபைக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறேன்.

கர்த்தருடைய அளவில்லாத கிருபையால் மார்ச் மாதத்தில் குருத்தோலை ஞாயிறு மற்றும் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஆராதனைகள் மூன்று மாநிலங்களில் உள்ள அனைத்து ஷாலோம் சபைகளிலும் சிறப்பாக ஆராதித்து கொண்டாடினார்கள். அந்த நாட்களில் முதற்கட்டமாக சுமார் 2000 பேர்கள் ஞானஸ்நானம் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள். இன்னும் பல்லாயிரம் ஆத்துமாக்கள் ஆயத்தமாகி வருகிறார்கள். மார்ச், ஏப்ரல் மாதங்களில் மகர்தா (இராஜஸ்தான்), பாண்டிசேரா, மேந்திகேடா (மத்தியப்பிரதேசம்), கரம்பா (குஜராத்) ஆகிய நான்கு கிராம ஆலயங்கள் தேவநாமத்தின் மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஏப்ரல் 9–12 வரை **Dr. Abel, Dr. Jolly Abel** மற்றும் **Dr. Inbakumar** அவர்கள் மூவருமாக சென்னையிலிருந்து பணித்தளத்திற்கு வருகைத் தந்தார்கள். தாகோத்தில் உள்ள IP Mission-க்குச் சொந்தமான மருத்துவமனை வளாகத்தை 10 வருடங்களுக்கு எடுத்து **Dr. Inbakumar** அவர்கள் தலைமையில் ஷாலோம் மருத்துவ பணிகளை ஜுன் மாதம் முதல் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கான பேச்சு வார்த்தை IP Mission தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்களுடன் நடத்தப்பட்டது. அனைவரும் தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். விசேஷமாக 11.04.2013 அன்று ஷாலோம் இலவச **சிறப்பு மருத்துவமுகாம்** நடத்தப்பட்டு தேவநாமம் மகிமைப்பட்டது.

ஏப்ரல் மாதம் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளில் மத்தியப்பிரதேசத்தில் அலிராஜ்பூர் மாவட்டத்தில் வால்பூர் பகுதியிலும், ஜாபுவா மாவட்டத்தில் ரானாபூர், பிட்டோல் பகுதிகளை சந்திக்கவும், குறிப்பாக 15 ஊழியர்கள் குடும்பங்களை சந்திக்கவும், சுமார் 10 கிராம ஆலயங்களில் செய்திக் கொடுக்கவும் தேவன் கிருபைத் தந்தார். மேலும் வால்பூர், தேல்வாணி, பிட்டோல், ஒபேரா, தாமணி, பாடல்வா, சாப்ரி ஆகிய கிராம ஆலய கட்டுமானப் பணிகளை பார்வையிடவும் தேவன் கிருபைச் செய்தார்.

தேவகிருபையால் ஏப்ரல் 15,16 ஆகிய நாட்களில் மத்தியபிரதேசம், 18,19 ஆகிய நாட்களில் இராஜஸ்தான், 22,23 ஆகிய நாட்களில் குஜராத் மாநிலங்களில் உள்ள அனைத்து சபைகளில் உள்ள CBC பயிற்சியாளர்களுக்கான சிறப்புக் கூடுகை மற்றும் ஊழியர்களின் கூடுகை நடத்தப்பட்டது. சுமார் 1000 பேர்கள் CBC-யில் பயிற்சிபெற்று 600க்கும் அதிகமான கிராமங்களில்

30,000 சிறுவர்களுக்கு CBC நடத்த உள்ளார்கள். மே மாதம் 6ம் தேதி முதல் 15ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற்று வருகிறது. இந்த **CBC (VBS)** ஊழியங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். ஷாலோம் திருச்சபைகளில் உள்ள அனைத்து சபைகளிலும் மே மாதம் 19ம் தேதி CBC ஞாயிறாக கொண்டாடுகிறார்கள். குறிப்பாக இத்திட்டத்திற்கான நிதி உதவி **ரூ. 3 இலட்சம்** முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. இதற்காக ஜெபித்து, உங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய அன்புடன் கேட்கிறேன்.

இம்மடல் உங்களுக்கு கிடைக்கும்போது சென்னை M.C.C. மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியிலிருந்து வரும் ஆசிரியர்கள் மூலமாக நடைபெற உள்ள ஏப்ரல் 29ம் தேதி முதல் மே 5ம் தேதிவரை 1 வார சிறப்பு ஆங்கிலமொழிப் பயிற்சி திட்டத்திற்காக ஜெபியுங்கள். இதன் மூலம் ஷாலோம் அலுவலக ஊழியர்கள், Project ஊழியர்கள் மற்றும் +2 படித்த மாணவ மாணவியர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

நம் ஊழியத்தில் திரளான தேவைகள் சந்திக்கப்படவும், குறிப்பாக ரூ. 500/– மற்றும் ரூ.1000/– மாதம் காணிக்கை தந்து ஜெபித்து தாங்கும் ஷாலோம் ஊழிய பங்காளர்கள் உடனடியாக 500 பேர்கள் கிடைக்கப் பெற ஜெபியுங்கள். மே மாதம் தமிழகத்தில் நடக்க இருக்கும் எல்லா மிஷனெரி கூட்டங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

மே மாத விடுமுறை நாட்களில் தமிழகமெங்குமுள்ள சபைகளில் மற்றும் நம் ஊர்களில் நடைபெற உள்ள நற்செய்திக் கூடுகைகள், முகாம்கள் அனைத்திற்காக ஜெபியுங்கள். நீங்களும் மே மாத விடுமுறையில் உங்கள் குடும்பத்தில் அமைதியாக, சந்தோஷமாக சிலநாட்களை செலவழித்து கர்த்தருக்குள் களிகூருங்கள். பிள்ளைகளின் பள்ளி தேர்வு முடிவுகள் மற்றும் பள்ளி கல்லூரி சேர்க்கைகள், வேலை வாய்ப்புகள், திருமண காரியங்களையெல்லாம் தேவன் வாய்க்கப்பண்ணுவார்.

மேலும் மே மாதம் 5ம் தேதி தூத்துக்குடியில் நடைபெறவுள்ள ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகைக்காக ஜெபியுங்கள். கூடுகையில் அநேக தேவ ஜனங்கள் பங்கு பெறவும், கால சூழ்நிலைகளை தேவன் சாதகமாக்கித் தரவும் ஜெபியுங்கள்.

ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள், முன்னேற்றப்பணி ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காக, அவர்கள் செய்துவரும் தொழில்கள், வேலைகள், ஊழியங்கள் போன்றவற்றிற்காக ஜெபியுங்கள்.

**"அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்".** சங்கீதம் 147:13


**கர்த்தர்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# உனக்கு முன்பாக திறந்த வாசல்



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

*பிரியமானவர்களே!*

**"... பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்"** வெளி. 3 :7,8

நம்முடைய வாழ்க்கைப் பாதையிலும், குடும்பத்தின் காரியங்களிலும், ஊழியப்பாதையிலும் அநேகத் தடைகளை பல முறை நாம் கண்டிருக்கிறோம். நம் வாழ்க்கையில், குடும்பத்தில் பல நேரங்கள் பூட்டப்பட்ட அல்லது மூடப்பட்ட சூழ்நிலைகள் மத்தியில் ஆசீர்வாதங்களை சுதந்தரிந்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் பாரத்தோடு, ஊழியப்பாதையில் வளர்ச்சிகளுக்காக, சபை ஆசீர்வாதங்களுக்காக சபையாகக் கூடி ஜெபிக்கிறோம். தேசத்தில் உள்ள அந்தகாரங்கள் நீங்கி, சுவிசேஷம் அறிவிக்கப்பட தேசம் ஆசீர்வதிக்கப்பட்டு மாபெரும் எழுப்புதலைக் காண திறப்பில் நின்று ஜெபிக்கிறோம். ஜெபத்திற்கு பதில் கிடைக்கும்படியாக திறந்தவாசலை தேவன் கட்டளையிடும்போது அதைக் கண்டு நாம் ஆனந்தமடைந்து, தேவனை துதிப்போம். இந்த வேளையிலும் தேவன்தாமே "உங்களுக்கு நீங்கள் எதிர்பார்க்கும் திறந்தவாசலைக் கட்டளையிட்டு உட்சென்று நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் சுதந்தரிக்கப் பண்ணுவார்". ஜெபத்துடன் வாசியுங்கள்.

## அடைக்கப்பட்ட வாசல்களைத் திறக்கும் தேவன்

தேவ ஜனங்கள் தேவனுடைய வாக்குதத்தத்தின்படி சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய ஆசீர்வாதங்களுக்கு விரோதமாக, எதிராக நிற்கும் அடைக்கப்பட்ட கதவுகளைத் தேவன் தகர்த்து, உடைத்து தம் ஜனங்களை உட்பிரவேசிக்கச் செய்கிறார். யோசுவா 6ம் அதிகாரம் முதல் வசனத்தை வாசித்துப் பாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய கானான் தேசத்திற்கு தடையாக எரிகோ கோட்டை அடைக்கப்பட்டு இருந்தது. கானான் தேசத்தைக் குறித்து வாக்குதத்தத்தை தேவன் கொடுத்திருக்கிறார். அதற்காக முன்நடத்திச் சென்றாலும் எரிகோவின் கோட்டை எதிராக நிற்கிறது.

அன்பான தேவ ஜனங்களே, உங்களுக்கென்று தேவன் தந்த வாக்குதத்தங்களை மறந்துவிடாதீர்கள். நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். இம்மட்டும் நடத்திய எபனேசர் அவர், இனிமேலும் நடத்துவார். உங்களுக்காக, உங்கள் பிள்ளைகளுக்காக தேவன் முன் குறித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதபடி உங்களுக்கு முன்பாக எரிகோ கோட்டை போன்ற தடைகள் நிற்கிறதோ? ஊழியப்பாதையிலும், சபை வளர்ச்சியிலும் கிராமங்களை சுதந்தரிந்துக் கொள்ள முடியாமல் அதிகாரங்கள், சமுதாய தடைகள், பிசாசின் அந்தகார சக்திகளை முன்நிற்க காண்கிறீர்களோ? இன்று தேவன் அவைகளை உடைத்தெறிவார்.

தேவன் தம் ஜனங்களைப் பார்த்து குறிப்பாக யோசுவாவிடம் என்ன சொன்னார் என்று பாருங்கள், "ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக் கொண்டு போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊதவேண்டும்". யோசுவா 6:4 விசுவாசத்துடன் தேவனை துதித்துப் பாடி சுற்றி வரும்போது என்ன நடந்தது, யோசுவா 6:16ல் "ஏழாந்தரம் ஆசாரியர் எக்காளங்களை ஊதுகையில் யோசுவா ஜனங்களை நோக்கி: ஆர்ப்பரியுங்கள், பட்டணத்தைக் கர்த்தர் உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்". அப்படியே எரிகோவின் கோட்டைகள் இடிந்து விழுந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோவை சுதந்தரித்தது மட்டுமல்ல, மேலும் முன் நோக்கியும் சென்றார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு மத்தியப்பிரதேசத்தில் ஜாபுவா மாநிலம் அந்தர்வேலியா கிராமத்தை மையமாக வைத்து நம் ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்து வந்தார். திடீரென எதிர்ப்புகள், போராட்டங்கள பெரிய அளவில் வெடித்தது. ஆலயங்கள் இடித்து சேதமாக்கப்பட்டது; நம்முடைய அர்மதா ஜீப் தீ வைத்துக் கொழுத்தப்பட்டது. சுதேச ஊழியர்கள் மோட்டர் சைக்கிள்களும், வீடுகளும் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பல ஊழியர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் அடிக்கப்பட்டு பல நிந்தைகளை அனுபவித்தார்கள். இனி முன்செல்ல முடியாது, சுவிசேஷத்திற்கான தடைகள் பெரிய கோட்டையாகக் காணப்பட்டது. ஆனால் நாங்கள் அனைவரும் சுதேச ஊழியர்களுடன் கூடி அப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனை துதிக்க ஆரம்பித்தோம். தேவன் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கொடுத்தார். குறிப்பாக உங்களுக்கு விரோதமாக நிற்பவர்களை தேடியும் காணமாட்டீர்கள், திறந்தவாசலை ஜாபுவா மாவட்டத்தில் தருவேன் என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார். சில மாதங்களில் முழு சூழ்நிலைகளையும் தேவன் மாற்றி திறந்தவாசலைத் தந்தார். இன்று 3 மடங்கு ஊழியம் வளர்ந்துள்ளது. நம் சபை மூப்பர்கள் அநேக கிராம பஞ்சாயத்து தலைவர்களாக உள்ளார்கள். கிறிஸ்தவ MLA-வையும் தேவன் ஆதரவாகத் தந்துள்ளார். நூற்றுக்கணக்கான கிராமங்களில் சபைகள் எழும்பி உள்ளது. விரைவாக ஆலயங்கள் கட்டப்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை.

இப்பொழுதும் உங்களுக்கு முன்பாக உள்ள எப்படிப்பட்ட சூழ்நிலைகளையும், அடைக்கப்பட்ட வாசல்களை உடைக்கும்படியாக தேவன் எழுந்தருளுவார். விசுவாசத்துடன் சோர்ந்து போகாமல் தேவநாமத்தை உயர்த்தி, நாம் தேவனையே துதிப்போம். கர்த்தர்தாமே உங்களுக்கு முன்செல்வார். தடைகளை நீக்கி உட்சென்று பிரவேசித்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## இடிந்து போனவைகளை, இழந்து போனவைகளைத் திரும்ப கட்டுவதற்கான திறந்தவாசல்

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக தொடர்ந்து பாவஞ்செய்து கர்த்தருடைய கற்பனைகளையும், நியமங்களையும் விட்டு விலகினபோது தேவன் அவர்களை கைவிட்டு, சத்துருக்களின் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தார். "அவர்கள் தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்தி, எருசலேமின் அலங்கத்தை இடித்து, அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்து அதிலிருந்த திவ்வியமான பணிமுட்டுகளையெல்லாம் அழித்தார்கள்". II நாளா.36:19 ஆகிலும் தேவன் தம் ஜனங்களை நேசிக்கிறபடியினாலும், இரக்கமும், மன உருக்கமும் நிறைந்த தேவனாக இருக்கிறபடியினாலும் கர்த்தர் ஆபிரகாம், தாவீது ஆகியோருடன் பண்ணின உடன்படிக்கையை நினைவு கூர்ந்து அவர்களை விடுவிக்க சித்தம் வைத்தார்.

ஆனால் அவர்களை விடுவிக்கும் முன் 70 ஆண்டுகள் தேவன் அமைதியாக இருந்து, தம்முடைய சித்தத்தின்படி கர்த்தர் நியமித்த வேளையில் இடிந்து போனவைகளையும், இழந்து போனவைகளையும் திரும்ப கட்டுவதற்கான திறந்த வாசலைக் கொடுத்தார். **"கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க் கிடந்த நாளெல்லாம், அதாவது, எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது".** II நாளா.36:21. பிறகு புறஜாதி ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதின் மூலமாய் ஆண்டவர் திறந்தவாசலை தமது ஜனங்களுக்கு கொடுத்தார். **"...கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்: பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்கு கட்டளையிட்டிருக்கிறார்" அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்".** எஸ்றா 1:1–3.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும், ஊழியத்தின் பாதையிலும் ஒருவேளை நாம் ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்தபடியினால், அல்லது பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தினதினால் மிகப் பெரிய இழப்புகளை சந்திந்திருக்கலாம். நாம் செய்கிற தொழில், இல்லையென்றால் நாம் பணிபுரிகிற நம்முடைய வேலைகளில் இப்படிப்பட்ட காரியங்களை சந்திந்திருக்கலாம். தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாமல், நிர்விசாரமாய் தேவபயமின்றி ஊழியம் செய்தபடியால், ஆதியில் தேவன் கொடுத்த விலையேறப்பெற்ற அபிஷேகத்தையும், ஆவிக்குரிய வரங்களையும் இழந்திருக்கலாம். மட்டுமல்லாமல் ஊழியமே இடிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனாலும் பிதாவாகிய தேவன் கோரேசு ராஜாவை இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்ததுபோல நமக்காக தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விலையேறப்பெற்ற பலியாக கொடுத்திருக்கிறார். அவர் மூலமாக தேவனுடைய ஆலயமாகிய நம்மை மறுபடியும் கட்டி, பரிசுத்தமான தேவ உறவுகளை புதுபிக்கிறார், இழந்துபோன கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் மறுபடியும் கூட்டிக்கொடுக்கிறார். ஏசாயா 45 : 1ல் கோரேசு ராஜாவுக்கு முன்பாக வாசல்கள் பூட்டாதிருக்கவும், கதவுகளைத் திறந்துவைக்கும்படிக்கும் திறந்தவாசலை தந்த தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு தாவீதின் திறவுக்கோலையும், அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். ஆகவே இழந்துபோனதை தேடவும், இரட்சிக்கவும் வந்த இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்க்கையிலும், வேலைகளிலும், ஊழியத்தின் பாதைகளிலும் இடிந்து போனவைகளை, இழந்து போனவைகளை கட்டாயம் மறுபடியும் கட்டுவதற்கு புதிய வாசல்களைத் தருவார்.

## சுவிஷேசத்தை அறிவிக்கும்படியான திறந்த வாசல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரத்துக்கு ஏறும்போது சீஷர்களிடம், உலகமெங்கும் சுவிஷேசத்தை அறிவிக்கும்படியான கட்டளையைக் கொடுத்தார். அதுமட்டுமல்லாமல் அப்.1:8ன்படி **"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின்**

**கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்".** மேலும், இயேசுவானவர் தாம் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்று வாசிக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு முன்பாக சுவிஷேசத்தை உலகமெங்கும் உள்ள சகலஜாதிகளுக்கும் அறிவிக்கும்படியான பொறுப்பை ஆண்டவர் ஒவ்வொரு சபைக்கும், ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் கொடுத்திருக்கிறார். அதற்கான திறந்த வாசல்களையும் ஆண்டவர் கொடுக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் வாசிக்கும்போது முதலாவது எருசலேமிலும், பின்பு யூதேயாவிலும், பின்பு புறஜாதிகளின் மத்தியிலும் விசேஷமாக அப்போஸ்தலர் பவுல் மூலமாக ஒவ்வொரு தேசங்களிலும் நற்செய்தி அறிவிக்க தேவன் வாசல்களை திறந்ததைக் காண்கிறோம்.

இதேபோல நம்முடைய பாரத தேசத்துக்கு முதல் நூற்றாண்டிலேயே சுவிஷேசத்திற்கான திறந்தவாசலை கொடுத்து அப்போஸ்தலர் தோமாவை அனுப்பினார். அதைத் தொடர்ந்து வில்லியம்கேரி, சீகன்பால்க், ரேனியஸ், மர்காஷிஸ், ராக்லண்ட், ரிக்கல் தோபே போன்ற நூற்றுக்ககணக்கான மிஷனெரிமார்களை சுவிஷேசத்தை அறிவிக்கவும், சபைகளை ஸ்தாபிக்கவும் தேவன் அனுப்பினார்.

விஷேசமாக நாம் வாழ்கிற இந்த தலைமுறையில் எந்த அளவிற்கு இல்லாத திறந்தவாசலை தேவன் ஒவ்வொரு மாநிலங்களிலும், ஒவ்வொரு ஜாதிகளின் மத்தியிலும் தந்திருக்கிறார். இந்தியாவில் பாரததேசத்தில் பட்டினங்கள், நகரங்கள், கிராமங்கள் மற்றும் மலைவாழ் ஆதிவாசி மக்கள் வாழும் உள்ளடங்கிய கிராமங்களில் ஆயிரமாயிரம் ஊழியர்களும், பல்லாயிரக்கணக்கான சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கடந்த 20 ஆண்டுகளில் 1கோடி பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்ற குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலுள்ள 7000 கிராமங்களில் தேவன் 500–க்கும் அதிகமான ஊழியர்களையும், 600க்கும் அதிகமான சபைகளையும், பல்லாயிரக்கணக்கான ஆத்துமாக்களையும் தந்து பெருகப்பண்ணினபடியால் தேவனுக்கு மகிமையைச் செலுத்தி, அவரைத் துதிப்போம். 2020ஆம் ஆண்டுக்குள்ளாக முழு பீல்மக்களையும் இரட்சித்து, 7000 கிராமங்களில் 7000 சபைகளை தேவன் தருவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். ஆகவே இந்த திறந்தவாசலைப் பயன்படுத்தி சபைகளை ஸ்தாபிக்கும் ஊழியர்களை எழுப்புவோம்! கிராமங்கள் தோறும் ஆலயங்களைக் கட்டுவோம்! நம் தலைமுறைகளில் நம் பாரத தேசம் தேவனை அறிந்துக் கொள்ளட்டும். திறந்தவாசல் அடைப்படும் முன் நம்மிலே ஜெபிக்க முன்வருவோர் யார்? நற்செய்திப் பணிக்கு ஊழியர்களை அனுப்ப முன்வருவோர் யார்? கிராமங்கள் தோறும் ஆலயங்களைக் கட்ட முன்வருவோர் யார்? யார்? திறந்த வாசலைப் பயன்படுத்துவோம், விளைந்த பலனை அறுவடைச் செய்வோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!!

**திறவுண்ட வாசல் அடைப்படும்முன், நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்?**
**நாட்கள் கொடியதாய் மாறிடுதே காலத்தை ஆதாயம் செய்திடுவோம்.**

---

**"அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே". ரோமர் 10:14**

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



- ❋ நம் தலைமுறையில் முழு பீல்மக்களுக்கும் சுவிஷேசம் அறிவிக்கப்படவும், 2020க்குள் 7000 கிராமங்களில் 7000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
- ❋ ஷாலோம் திருமண்டல சபைப் பணிகளின் வளர்ச்சிக்காகவும், ஷாலோம் மிஷனெரிப் பணிகளின் திட்டங்களுக்காகவும், ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.
- ❋ **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.
- ❋ ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.
- ❋ தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள அநேகக் கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று மேற்கூரை அமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.
- ❋ நமது பணித்தளங்களில் இந்த மாதம் நடைபெறவிருக்கும் CBC – சிறுவர் வேதாகமப் பள்ளிகளுக்காகவும் இதில் பங்கேற்கவிருக்கும் 30 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்படவும், இதற்காக நடைபெற்று வரும் ஆயத்தப்பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.
- ❋ வரும் ஜுன் மாதம் புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைக்கும் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களை தேவன் ஆசீர்வதித்து ஞானத்தினால் நிரப்பவும், மேற்படிப்பிற்காக காத்திருப்போருக்கு தேவன் நல்ல வழி வாசல்களைத் திறக்கவும் ஜெபியுங்கள்.
- ❋ 2013 மே மாதம் 5ம் தேதி தூத்துக்குடி, A.S.K.R. திருமண ஹாலில் வைத்து நடைபெற இருக்கும் மிஷனெரி தரிசனக் கூடுகைக்காக, அநேக தேவப் பிள்ளைகள் பங்கு பெற்று மிஷனெரி தாகம் பெற, கூடுகையை தேவன் ஆசீர்வதிக்க, தேவதாசர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளும்படி அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**ஷாலோம் 10 லட்சம் ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டங்களில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் சில!**

**பெயர் : பினா பேன், வயது : 33**

**ஊர் : பாட்டியா, குஜராத்**



அநேக நாட்களாக எனது இடது கண்ணில் அதிகமான வேதனை இருந்தது. ஜெப எண்ணெய் பூசி ஜெபிக்கும் போது குணமாகி விடும் ஆனாலும் திரும்ப வலி வந்து விடும். இப்படியாக எனது நிலைமைக் காணப்பட்டது. எனது இடது கண்ணில் வலி இருப்பதால் முகத்தில் இடது பக்கம் முழுவதும் வலிக்கும். இப்படியாக கஷ்டப்பட்டு வந்தேன். இந்நிலையில் பாட்டன்புரா கிராம ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் பங்கு பெற்றேன்.

அதோடு எனது வலது தோளில் வீக்கமும் வலியும் தாங்க முடியாமல் இருந்தது. ஆலயத்தில் பாடல்களைப் பாடும் போது கூட நான் கை தட்ட முடியாமல் பிடித்துக் கொண்டே பாடிக் கொண்டிருந்தேன். அன்று பாட்டன்புரா ஆலயத்திற்கு சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் ஆராதனை நடத்தினார்கள்.

கடைசியில் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த போது எனது கண்ணில் இருந்த வலியும் தோளில் இருந்த வலியும் நீங்கி, என்னால் கையை நன்றாக உயர்த்த முடிகிறது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டேன். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**பெயர் : சந்தோஷ், வயது : 12**


**ஊர் : அமிர்புரா, இராஜஸ்தான்**



எனக்கு சிறு வயதிலிருந்தே இரண்டு கை, கால்களும் வளைந்து காணப்பட்டதால் என்னால் நடக்க முடியாமல், எங்கு சென்றாலும் என்னைத் தூக்கிக் கொண்டு தான் செல்வார்கள். என்னால் பேசவும் முடியாது. இந்நிலையில் பட்டார் கிராம ஆலயப்பிரதிஷ்டை அன்று என்னை ஒரு துணியில் தொட்டில் போன்று கட்டி தூக்கிக் கொண்டு ஆலயத்திற்குச் சென்றார்கள்.

அங்கு ஆராதனை வேளையின் போது தேவன் என்னைத் தொட்டார். நான் முதல் முறையாக எழுந்து நின்றேன். அதோடு கூட பேச முடியாமல் இருந்த நான் முதன் முதலாக ஜெய் இயேசு என்று சொன்னேன். அப்பொழுது எனது கை மற்றும் கால்களில் புது பெலன் கிடைத்ததைப் போன்று உணர்ந்ததால், தொடர்ந்து ஆலயத்திற்குச் செல்ல ஆரம்பித்தேன். ஒரு நாள் பட்டார் கிராம சபையில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அங்கு ஜெப வேளையில் என் மீது தேவனுடைய வல்லமை இறங்கியதை உணர்ந்தேன். அதன் பின் நான் பரிபூரண சுகம் பெற்றேன்.

இப்போது என்னால் நன்றாகப் பேச முடிகிறது, மற்றவர்களைப் போல நடக்க, ஓட முடிகிறது. நான் இப்பொழுது மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். என்னைத் தொட்டு சுகமாக்கின தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!




**பெயர் : லீலா பேன்,** **வயது : 28**

**ஊர் : பட்டார், இராஜஸ்தான்**

எனது வலது கால் புண்ணாகி அழுகிப் போய் விட்டதன் காரணமாக காலில் எரிச்சல் ஏற்பட்டது. பின்பு வயிற்றுப் பகுதியிலும் பயங்கரமான எரிச்சல் காணப்பட்டது. இந்நிலையில் நான் பட்டார் கிராம ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன்.

அங்கு வியாதியஸ்தர்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அப்போது எனக்கு கால் மற்றும் வயிற்றில் இருந்த எரிச்சல் மறைந்தது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கே மகிமை!

---



**பெயர் : அமர்சிங்,** **வயது : 57**

**ஊர் : பாட்டன்புரா, குஜராத்**

எனது வலது கையிலும் இடது கால் மூட்டுப் பகுதியிலும் பயங்கரமான வலி இருந்தது. என்னால் கையை மடக்கவோ, தூக்கவோ முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இந்நிலையில் பாட்டன்புரா கிராம ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் பங்கு பெற்றேன். அங்கு **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து ஜெபித்தார்கள். ஜெபத்திற்கு பிறகு என்னால் கையை நன்றாக மடக்கவோ, தூக்கவோ முடிகிறது. எனது கால் மூட்டில் இருந்த வலியும் சுகமானது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கே ஸ்தோத்திரம்!

---

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

***அன்பான ஆதரவாளர்களே,***

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

## ஷாலோம் பிரதிநிதிகள் தேவை....

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் பணித்தளங்களில் ஊழியங்கள் வளர்ந்து பெருகி வருவதால், அதற்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இதற்காக தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளை சேகரித்து அனுப்பும், **ஷாலோம் பிரதிநிதிகள் 300** பேர் தேவை. கர்த்தரால் ஏவப்படுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுமாறு அன்பாய்க் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



# பீல் ஆதிவாசி மாணவர்
## பராமரிப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **அன்கலேஷ் டாமோர்** |
| தந்தையின் பெயர் | : | துல்லா டாமோர் |
| தாயார் பெயர் | : | கபு டாமோர் |
| பிறந்த நாள் | : | 05.02.2006 |
| படிக்கும் வகுப்பு | : | U.K.G. |
| சொந்த ஊர் | : | மோர்ஜெரி |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

**மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–**

இவனுடைய தந்தை சகோ. துல்லா டாமோர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் திடீரென வியாதியின் பிடியில் சிக்கி, குடும்பத்தில் சமாதானம் சந்தோஷம் இன்றி மிகவும் அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தார். விடுதலைக்காக அநேக மந்திரவாதிகளை நாடி மந்திரக் கிரியைகள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இறுதியாக கிறிஸ்து இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஷாலோம் சுதேச ஊழியரிடம் ஜெபிக்கச் சென்றார். ஊழியரும் இவருக்காக பாரத்தோடு ஜெபிக்கவே, ஜெபத்தினைக் கேட்டு தேவன் இவருக்கு வியாதியில் இருந்தும், அந்தகாரத்தில் இருந்தும் விடுதலைக் கொடுத்தார். அதன் பின் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் விசுவாசியாக இருந்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** அன்கலேஷ் நன்றாக படிப்பான், விளையாட்டு மிகவும் பிடிக்கும்.

**ஜெபியுங்கள்:–** இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற வேலைகளுக்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mr. R. Malton Ivan - Kanchipuram***

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 163 மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப் படுகிறார்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக அறிமுகப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். ***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம்.

# ஷாலோம் பணித்தளத்தில் சென்னையிலிருந்து அன்பு சகோதரர்கள். . .

**இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்,**

தேவகிருபையால் அநேக நாட்கள் ஜெபித்து ஆவியானவரின் வழிநடத்துதலின்படி **15.03.13** முதல் **18.03.13** வரையிலான நான்கு நாட்கள் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களில் நடைபெற்று வரும் பணித்தள ஊழியங்களைப் பார்வையிட **சகோ. இம்மானுவேல் சேகர், சகோ. சின்னத்துரை, சகோ. யூதராஜசிங், சகோ. டேவிட் (எ) ஈஸ்வரன்** போன்ற நான்கு சகோதரர்கள் வந்திருந்தார்கள்.

**15.03.13** வெள்ளிக்கிழமை காலை இரண்டு குழுவாகப் பிரித்து அழைத்துச் செல்லப்பட்டார்கள். **சகோ. இம்மானுவேல், சகோ. யூதராஜசிங்** ஆகிய இரண்டு பேரை **சகோ. சாமுவேல்** அவர்கள் **மத்தியபிரதேசத்தில் பாடல்வா, டிக்கிடி, ஜாம்புகேடா** ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள ஆலயங்களைப் பார்வையிட்டார்கள். பின்பு **பாடல்வா** கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துக்கொண்டு இவர்களுடைய சாட்சிகளைப் பகிர்ந்துக் கொண்டார்கள். மேலும் அந்த மக்கள் ஆடி, பாடி தேவனை மகிமைப்படுத்துவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு தேவனைத் துதித்து, தேவன் எவ்வளவாய் கிரியைச் செய்து வருகிறார் என்பதை உணர்ந்துக் அவரைத் துதித்தார்கள்.

**சகோ. சின்னத்துரை** மற்றும் **சகோ. டேவிட்** அவர்களை **சகோ. கேரட்** அவர்கள் **இராஜஸ்தானிலுள்ள பெடேவ், சுடாதா** பணித்தளத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துக்கொண்டு தங்களுடைய சாட்சியைப் பகிர்ந்துக் கொண்டார்கள்.

**16.03.13** சனிக்கிழமை அன்று முதல் நாள் சென்றதுபோலவே மறுநாளும் இரண்டு குழுவாகவே சென்றார்கள். முதல் குழு **மத்தியபிரதேசத்திலுள்ள மாண்டலி, சொக்வாடா, ஹக்வானி, தேவ்கா** ஆகிய ஆலயங்களைப் பார்வையிட்டார்கள். **சொக்வாடா** ஆலயத்தில் அவர்களுடைய சாட்சிகளைப் பகிர்ந்துக் கொண்டார்கள். பின்பு **இராஜஸ்தானில் சகோ. யூதராஜசிங்** அவர்கள் குடும்பம் தாங்கி வருகிற **அம்பு பனதா** என்ற மாணவியை சந்தித்து வெகுமதிகளைக் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

இரண்டாவது குழு குஜராத்தில் உள்ள முதல் ஆலயமாக **ஹிரோலாவையும்**, அந்த கிராமத்தில் நடைபெற்று வரும் Shalom Compassion Children Project-யையும் பார்வையிட்டார்கள். பின்பு **கொலானா** மற்றும் **IPM ஹாஸ்டலையும்**, பார்த்துவிட்டு, இங்கு **சகோ. சின்னத்துரை** மூலம் தாங்கப்பட்டு வரும் **மார்தா** என்ற மாணவியையும் சந்தித்து வெகுமதிகளையும் வழங்கினார்கள். பின்பு நான்குபேரும் தாகோத் விடுதியைப் பார்வையிட்டு அங்கு **சகோ. இம்மானுவேல் சேகர்** அவர்கள் மூலம் தாங்கப்பட்டுவரும் **ஆசீர்வாத் சங்கடா** என்ற மாணவனுக்கு வெகுமதிகளும், அனைத்து மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டது.

17.03.13 ஞாயிற்றுக்கிழமை அன்று இவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அழைத்துச் செல்லபட்டார்கள். **சகோ. இம்மானுவேல் சேகர்** அவர்களையும், **சகோ. யூதராஜசிங்** அவர்களையும் **சகோ. கேரட்** அவர்கள் ஒரு குழுவாக அழைத்துக் கொண்டு **இராஜஸ்தானில் கொய்கா, கும்புரா** ஆகிய ஆலயங்களையும் பார்வையிட்டு, பின்பு பிஜல்பூர் ஹாஸ்டல் மாணவர்களையும் பார்த்தார்கள். **சகோ. யூதராஜசிங்** அவர்கள் குடும்பத்தின் சார்பாக மகர்தா சபையின் **சுதேச ஊழியர் காவ்ஜி கட்டாரா** அவர்களுக்கு இருசக்கர வாகனம் வாங்கிக் கொடுத்தார்கள். மேலும் **மகர்தா கிராம ஆலயத்தை** அன்று சகோதரர்கள் பிரதிஷ்டைச் செய்தார்கள்.

**சகோ. சின்னத்துரை** அவர்களை **சகோ. சாமுவேல்** அவர்கள் குஜராத்தில் உள்ள **வரம்கேடா,போர்க்கேடா** மற்றும் **கங்கேலா** ஆகிய ஆலயங்களில் நடைபெற்ற ஆராதனைகளில் கலந்துக் கொண்டார்கள். **சகோ. டேவிட்** அவர்கள் **சகோ. ஜெயராஜ்** அவர்களுடன் மத்தியபிரதேசத்திலுள்ள **அந்தர்வேலியா, முண்டத், ரூபாகேடா** ஆகிய ஆலயங்களை பார்வையிட்டு, தன்னுடைய சாட்சிகளைப் பகிர்ந்துக் கொண்டார்கள். அதன்பின் 18.03.13 திங்கட்கிழமை அன்று இவர்கள் நால்வரும் **சகோ. திவாகர்** அவர்களுடன் இணைந்து ஜெரி கிராமத்தில் நடைபெற்று வரும் Shalom CDC-யை பார்வையிட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த பணித்தள பார்வை இவர்களுக்குள் ஒரு மாற்றத்தையும், தேவ ஆசீர்வாதத்தையும் கொடுத்தது. இவர்கள் இந்த ஊழியங்களுக்காக கொடுக்கவும், அநேக ஆதரவாளர்களை எழுப்பவும் திட்டமிட்டுள்ளார்கள். தேவன் தாமே இவர்களுடைய பிரயாசங்களை ஆசீர்வதிப்பாராக.

## இவர்களுடைய பணித்தள அனுபவங்கள்

**சகோ. சின்னத்துரை,** (ஷாலோம் பிரதிநிதி, சென்னை) :

நாங்கள் பணித்தளத்திற்கு சென்ற 3 நாட்களில் 3 மாநிலத்திலும் உள்ள பணித்தளத்திற்கும் சென்று அங்குள்ள சபைகளையும், அவர்களுடைய நடைமுறைகள், ஆராதனை செய்கிற முறைகளை பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. குடிக்காரர்களாக, திருடர்களாக, ஆண்டவரை அறியாதவர்களாக இருந்த முதியவர்கள் மட்டுமல்ல சிறுவர்கள் கூட இன்று அபிஷேகம் பெறுவதைப் பார்க்கும்போது வியப்பாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. அது எங்களுடைய வாழ்க்கையில் மறக்கமுடியாத ஓர் பெரிய அனுபவம். ஞாயிற்றுக்கிழமை கிராமத்திலுள்ள ஒரு சுதேச ஊழியரை நான் பார்த்தேன். அவர் ஆண்டவரை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு ஒரு பெரிய ரவுடியாக இருந்தாராம். ஆண்டவரை ஏற்றுக் கொண்ட இவர், தற்போது அநேக மக்களை தேவனுடைய மந்தையிலே சேர்ந்து வருகிறார்.

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் எங்களிடம் 2 மணி நேரம் அவர்களுடைய சாட்சியையும், ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட விதத்தையும், ஊழியர்களின் அபிஷேகத்தையும், எப்படி ஊழியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் குறித்தும் எங்களிடம் பகிர்ந்துக் கொண்டார்கள். அது எங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. மேலும் தேவன் எனக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். அநேக பிள்ளைகள் தேனீக்களைப்

போல மொய்த்துக் கொண்டு இருந்ததுபோல இருந்தது. எனக்கு இது என்ன தரிசனம் என்ற கேள்வியுடன் இருந்தேன். அப்பொழுது சகோதரி அவர்கள் கடைசியாக வரும்நாட்களில் பீல் ஆதிவாசி மாணவர்களில் 10000 பேரை படிக்க வைக்க வேண்டும் என்ற தரிசனத்துடன் செயல்பட்டு வருகிறோம் என்று கூறினார்கள். தேவன் எனக்கு கொடுத்த தரிசனமும் இதுதான் என்று உணர முடிந்தது.

**சகோ. டேவிட் (எ) ஈஸ்வரன்,** சென்னை

நாங்கள் பணித்தளங்களை சென்று பார்வையிட்டபோது அனைத்து பீல் மக்களும், இப்படிதான் ஆண்டவரை தொழுதுக் கொள்ளவேண்டும், இப்படிதான் ஆராதிக்கவேண்டும் என்ற வரைமுறையில்லாமல் உண்மையும் உத்தமத்தோடும் ஆராதிப்பதைப் பார்க்கும்போது அதிசயமாக இருந்தது. ஜெபம் பண்ணும்போது எங்களால் ஒருமணி நேரம் கூட முழுமனதுடன் ஜெபிக்க முடியாது. இந்த ஜனங்கள் காலை 10 மணிக்கு வந்து ஆராதிக்க ஆரம்பிக்கிறவர்கள் மாலை 4 மணி வரை முழுமனதுடன் ஆராதிக்கிறார்கள். இரண்டு கைகளையும் தூக்கி வைராக்கியத்துடன் ஜெபிப்பதைப் பார்க்கும்போது, எங்களுக்குள் ஆத்தும பாரமும் வைராக்கியம் பிறந்தது. இப்பொழுது **2 குழந்தைகளை** தாங்குவதற்கு கர்த்தர் கிருபைச் செய்தார். மேலும் அங்குள்ள ஹாஸ்டல் குழந்தைகளை சென்று பார்த்தோம். படிப்பறிவில்லாத குழந்தைகள் தற்போது படித்து வருவதை பார்த்தபோது, தேவன் எனக்குள் அதிக ஆத்தும பாரத்தைக் கொடுத்தார். வரும்நாட்களில் அநேக பீல் ஆதிவாசி பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும் என்பதே என்னுடைய வாஞ்சை.

**சகோ. யூதராஜசிங்,** சென்னை

நாங்கள் மத்தியப்பிரதேசத்திலுள்ள பாடல்வா என்ற பணித்தளத்திற்குச் சென்றோம். அங்கு சுகமளிக்கும் ஆராதனை நடைபெற்றது. மக்கள் பாடுகிறதையும், அபிஷேகம் பெற்றதையும், விடுதலை பெறுவதையும், ஜெபிப்பதையும், பார்த்தபோது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அனைவரும் யாரையுமே பார்க்காமல் நீண்ட நேரம் கண்களை மூடி ஜெபிப்பதை குறித்து மிகவும் சந்தோஷப்பட்டோம். நாங்களும் எங்களது சாட்சியை பகிர்ந்துக் கொண்டோம். அவர்களுடைய கலாச்சார வரவேற்பு மகிழ்ச்சியாக இருந்தது. பின்பு ஹரிநகர் ஹாஸ்டல் பிள்ளைகளையும் பார்த்தோம். ஞாயிற்றுக்கிழமை ராஜஸ்தானிலுள்ள பிஜல்பூர் ஹாஸ்டல் மற்றும் அருகிலுள்ள ஷாலோம் சபைகளையும் பார்த்தோம். பின்பு எங்கள் குடும்பத்தின் சார்பாக ஷாலோம் சுதேச ஊழியருக்கு வாங்கிக் கொடுத்த வாகனத்தை பிரதிஷ்டைச் செய்யவும், மகர்தா கிராம ஆலயத்தை திறப்பு விழா செய்யவும் ஆண்டவர் உதவி செய்தார். இந்த பணித்தளங்களைப் பார்க்கும்போது நாம் எவ்வளவு சுகமாய் வாழ்கிறோம் என்று நினைத்தேன். மேலும் இவர்களுக்கு நல்ல வீடு, போக்குவரத்து வசதி, தண்ணீர் எதுவுமே கிடையாது. ஒரு இடத்தில் இருந்து பல மைல்கள் நடந்தே செல்ல வேண்டியநிலை. இதனைப் பார்க்கும்போது, இப்பொழுது இப்படி என்றால் ஆரம்ப நாட்களில் **சகோ. தேவதாஸ்** மற்றும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு ஊழியம் ஆரம்பித்திருப்பார்கள் என்பதை

உணர்ந்தேன். நான் எங்கள் குடும்பத்தின் சார்பாக ஏற்கனவே 2 குழந்தைகளை தாங்கி வருகிறேன். இனிவரும் நாட்களில் நாங்களே இன்னும் அநேக குழந்தைகளை தாங்கவேண்டும் என்பதே எனது பாரம்.

**சகோ. இம்மானுவேல் சேகர்,** (ஷாலோம் பிரதிநிதி) சென்னை

நான் இங்கு வருவதற்கு முன்பு ஊழியங்கள் தமிழ்நாட்டில் எப்படி கிராமங்களாக சென்று ஊழியம் செய்வோமோ அப்படியே இங்கும் நடைபெறும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இங்குள்ள பணித்தளங்கள் வித்தியாசமாக இருந்தது. அனைத்து ஊர்களும் காடுகளாகவும், மலைகளாவும் இருந்தது. சாலைகள் மற்றும் பேருந்து வசதிகள் ஒன்றுமே இல்லை. சிறியதான ஆலயம் இருக்கின்றது. ஆனால் மக்கள் இருக்க இடம் இல்லாமல் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. நாங்கள் பாடல்வா என்ற பணித்தளத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துக் கொண்டோம். பீல் ஆதிவாசி மக்களுடைய விசுவாசத்தைக் கண்டபோது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவர்களிடம் இருந்த விசுவாசம் என்னிடம் இருக்குமா? என்ற கேள்வி எனக்குள்ளாக எழுந்தது, அந்த அளவிற்கு அவர்கள் விசுவாசமாய் ஜெபித்தார்கள். அங்கு நான் எனது சாட்சியை பகிர்ந்துக் கொண்டேன். ஷாலோம் ஊழியத்தின் பணித்தள ஆலயங்களையும், ஊழியங்களையும், ஹாஸ்டல்களையும், பார்க்க தேவன் கிருபைச் செய்தார். நான் ஏற்கனவே ஒரு குழந்தையைத் தாங்கி வருகிறேன். இனிவரும் நாட்களில் பீல் ஆதிவாசி மாணவர்களின் வாழ்க்கையை ஆசீர்வாதமாக மாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் என்னுடைய ஊழியத்தை தொடர்ந்துச் செய்வேன்.

**பணித்தளத்தில் நான் பெற்ற அபிஷேகம்**

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் எங்களை அன்புடன் உபசரித்து ஆவிக்குரிய அபிஷேகத்தைக் குறித்து எங்களுக்கு விவரமாக சொன்னார்கள். நான் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்தேன். சகோதரி அவர்கள் ஊழியர்களின் அபிஷேகத்தைக் குறித்து கூறினார்கள். நாங்கள் அன்று இரவு எங்கள் அறையில் சகோதரர்கள் கூடி அபிஷேகத்தை பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையுடன் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது தேவன் என்னை முதன்முதலாக அளவில்லாத அபிஷேகத்தால் நிரப்பினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

நாங்கள் அனைவரும் எங்களுடைய பகுதியில் இந்த ஊழியங்களை பற்றி அறிமுகப்படுத்தி இன்னும் அநேகர் இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் தாங்குவதற்கு முழு முயற்சியுடன் செயல்படுவோம். தேவன் தாமே இந்த ஊழியங்களை இன்னும் அதிகமாக ஆசீர்வதிப்பாராக! இதை வாசிக்கின்ற அன்பானவர்களே, திறந்த வாசலையும், பலத்த அறுவடையையும் தேவன் பீல் மக்கள் மத்தியில் கட்டளையிட்டிருக்கும்போது, நாம் ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபித்து உற்சாகமாகக் கொடுத்திடுவோம்! புதிய பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்கள் கிடைக்க ஜெபித்து செயல்படுவோம்! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## சென்னையைச் சேர்ந்த சகோ. யூதராஜசிங், சகோ. டேவிட், சகோ. சின்னத்துரை மற்றும் சகோ. இம்மானுவேல் சேகர் ஆகியோரின் பணித்தள வருகை



சகோ. யூதராஜசிங் & சகோ. இம்மானுவேல் சேகர் ஆகியோருக்கு மகர்தா சபையில் கலாச்சார வரவேற்பு



கங்கேலா கிராம சபையில் விசுவாசிகளுடன்



மகர்தா ஆலயப் பிரதிஷ்டையின் போது



மகர்தா சபை போதகர் சகோ. காவ்ஜி கட்டாராவிற்கு சகோ. யூதராஜசிங் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட இரு சக்கர வாகனம்



ரூபாகேடா ஆலயத்தில் சகோ. டேவிட் அவர்களின் சாட்சி வேளை



கங்கேலா கிராம சபையில் மூப்பர் நகின், சகோ. சாமுவேல் ஆகியோருடன் சகோ. சின்னத்துரை



சகோ. இம்மானுவேல் சேகர், சகோ. சின்னத்துரை, சகோ. யூதராஜசிங் ஆகியோர் தாங்கி வரும் மாணவர்கள் ஆசீர்வாத் சங்காடா, மார்தா டாமோர், அம்பு பனதா ஆகியோருடன்

## மிஷனெரிப் பிரதிஷ்டை ஆராதனை - 17.03.2013

### CSI தூய திரித்துவ ஆலயம் ராஜமணியபுரம், ஆறுமுகநேரி





## மிஷனெரிப் பிரதிஷ்டை ஆராதனை - 07.04.2013 (பயணம் CSI ஆலயம்)





## ஷாலோம் மருத்துவ முகாம், குஜராத் - 2013



மருத்துவ முகாமிற்கான ஆரம்ப ஜெபம்



நோயாளியை பரிசோதிக்கும் Dr. Inba அவர்கள்



நோயாளியை பரிசோதிக்கும் Dr. Abel அவர்கள்




வழங்கப்பட்ட இலவச மருந்து மாத்திரைகள்





# CBC (VBS)
# சிறுவர் வேதாகம வகுப்பு - 2013

பிரியமானவர்களே, நமது ஷாலோம் பணித்தளங்களிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருகிறார். மேலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்த சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதாகமப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் நமது ஷாலோம் சபைகளில் **சிறுவர் வேதாகமப் பள்ளி** (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2012ஆம் ஆண்டில் **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பில் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளுக்கு உதவி வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து, நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் **"என் நண்பன் - இயேசு"** என்ற தலைப்பில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள், 600 ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், 30000 CBC புத்தகங்கள், Badge. (30000), பாட்டுப் புத்தகங்கள் (10,000), கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 30 ஆயிரம் மாணவர்களுக்கு **ரூ. 3 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ ஒரு மாணவருக்கு ரூ. 10/- வீதம் உங்களால் முடிந்த அளவிலான ஆதிவாசி பிள்ளைகளுக்குக் கொடுத்து, இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க மிக அன்பாய் கேட்கிறோம். ஆதரவாளர்கள் இந்த மாதம் மிஷனெரி காணிக்கைகளை அனுப்பும்போது இந்த சிறுவர் ஊழியத்திற்கும் சேர்த்து காணிக்கைகளை அனுப்பினால் பணிகளை துரிதப்படுத்த மிகவும் உதவியாக இருக்கும்.**



CBC
பயிற்சி புத்தகங்கள் (2012)

**தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!**

# சகோ. அற்புதராஜ் அவர்கள் குடும்பத்தின் பணித்தள வருகை (குளத்துக்குடியிருப்பு)



பணித்தள அலுவலகத்தின் முன்பு
பிஷப் தேவதாஸ் அவர்களுடன்



ரூபாகேடா ஆலயத்தில் போதகர் சோம்லா புரியா அவர்கள் குடும்பத்துடன்



காளாகேத் கிராம ஆலயத்தில் போதகர் சர்தார் டாமோர் அவர்களுடன்



பாண்டிசேரா கிராம ஆலய பிரதிஷ்டைக்கு
உற்சாக வரவேற்பு



பாண்டிசேரா கிராம ஆலய பிரதிஷ்டைக்கான ஜெபம்



பாண்டிசேரா கிராம ஆலய பிரதிஷ்டையில்
திருமதி ஐடா தேவசகாயம் மற்றும் போதகர் ரமேஷ் டாமோர்



பாண்டிசேரா கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு



சகோ. அற்புதராஜ் செய்தி கொடுக்க மொழிப்பெயர்க்கும்
பிஷப். தேவதாஸ் அவர்கள்

# பணித்தளத்தில் கிராம ஆலயப் பிரதிஷ்டை

பணித்தளத்தை பார்வையிட்ட
**திரு. அற்புதராஜ்** அவர்கள் குடும்பத்தினரின் அனுபவ சாட்சி

தேவகிருபையால் நாங்கள் குடும்பமாக அன்பு தகப்பனார் **திரு. M. அற்புதராஜ் சாமுவேல்,** சகோதரன் **A. இம்மானுவேல் மோசஸ்** குடும்பமாக மனைவி **திருமதி. ஜெபலதா** மற்றும் பிள்ளைகள் **Mas. சாமுவேல், Miss.** பாலின், மற்றும் **திருமதி. ஐடா தேவசகாயம்** மற்றும் பிள்ளைகள் **Mas. ஜோசுவா, Miss.ஜான்சிராணி** ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடவும், எங்கள் குடும்பத்தின் சார்பில் கட்டப்பட்ட பாண்டிசேரா கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்யவும் குஜராத்தில் உள்ள ஷாலோம் பணித்தளம் தாகோத்திற்கு 30ம் தேதி இரவு வந்தடைந்தோம்.

உயிர்த்தெழுந்த திருநாள் அன்று வருடந்தோறும் எங்கள் ஊர் ஆலயத்தில் கொண்டாடி ஆராதிப்பது உண்டு. இவ்வருடம் ஷாலோம் பணித்தளத்திற்கு வந்தது தேவகிருபையே. காலையில் தாகோத்தில் உள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்தையும், மிஷனெரி பேராயர் இல்லத்தையும், ஷாலோம் பயிற்சிக் கூடத்தையும் காணும்படி தேவன் கிருபைத் தந்தார்.

அதன்பின்பு இரு வாகனங்களில் புறப்பட்டு சென்று முதலாவதாக குஜராத்தில் உள்ள கலலியாவட் (தெல்சர்) கிராமத்தில் உள்ள சபையையும், **பாஸ்டர். நவல்சிங் பில்வாள்** அவர்களையும், விசுவாசிகளையும் சந்திக்க தேவன் கிருபை தந்தார். ஈஸ்டர் திருநாள் அன்று சென்றபடியால் விசுவாசிகள் மகிழ்ச்சியுடன் பாடல் பாடி ஆராதித்தது மிகுந்த சந்தோஷத்தை தந்தது. மிக ஏழ்மையான நிலைமையில் சாபம், நோய், பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவித்து ஊழியம் தந்த காரியங்களை விவரித்து போதகர் கூறினார். இன்று மிகப்பெரிய ஆலயம் மற்றும் அழகான வீட்டை பற்றி சாட்சியை கேட்டு ஆச்சரியப்பட்டோம்.

பின்பு 20 கி.மீ தொலைவில் உள்ள மத்தியப்பிரதேசத்திலுள்ள ரூபாகேடா கிராம சபையையும், போதகர் சோம்லா புரியாவையையும், விசுவாசிகளையும் சந்திந்தோம். ஆலயத்திற்கு வெகு தொலைவிலிருந்து மக்கள் நடந்து வந்தார்கள். மிக நேர்த்தியான அழகான ஆலயத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். ஆலயம் கட்டுவதற்கு முன்பாக ஆராதித்த குடிசையையும் கண்டோம். இன்று அவர்கள் ஆனந்தத்துடன் அழகாக கட்டப்பட்ட ஆலயத்திற்குள் இருந்து தேவனை ஆராதித்து, எத்தனை மகிழ்ச்சியாய் காணப்படுகிறார்கள்.

அதன்பின்பு 10 கி.மீ பிரயாணப்பட்டு காளாகேத் என்ற கிராம ஆலயத்தை பார்வையிட்டோம். விசுவாசிகள் அநேகர் திரளாக காணப்பட்டார்கள். **போதகர். சர்தார்** அவர்கள் குடும்பம் மிக நேர்த்தியாக ஊழியம் செய்து வருவதைக் கண்டு மகிழச்சி அடைந்தோம். அவர்கள் அன்பு மகள் ஷீலா டாமோர் 10ம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் எடுத்து படித்து வருகிறாள். தான் சிறந்த மருத்துவராக படித்து சொந்த பீல் ஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தைக் கண்டு ஆனந்தமாக இருந்தது.

தொடர்ந்து 2 கி.மீ தொலைவில் உள்ள மான்லி கிராம சபையாரையும், **போதகர். மேன்சிங் டாமோர்** அவர்களையும் காண கிருபைத் தந்தார். மான்லி கிராம ஆலயம் கட்டுமான பணி முடிந்து பிரதிஷ்டைக்கு ஆயத்தமாக உள்ளதைக் கண்டோம்.

பின்பு 15 கி.மீ தூரம் குன்றுகள், மேடு பள்ளங்களிலும் பிரயாணப்பட்டு பாண்டிசேரா கிராமத்திற்கு வந்தடைந்தோம். ஆலயத்திற்கு வெகு தொலைவிலிருந்து விசுவாசிகள் மேளதாளங்களுடன் எங்களை வரவேற்றார்கள். ஆலயத்திற்கு செல்லும்வரை நடனமாடி தேவனை துதித்தார்கள். பின்பு **பேராயர் V. தேவதாஸ்** அவர்கள் துதித்து ஆலய பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அதன்பின்பு எங்கள் குடும்பத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட பாண்டிசேரா கிராம ஆலயத்தை எங்கள் தகப்பனார் **திரு. M. அற்புதராஜ் சாமுவேல்** அவர்கள் தேவனுக்கு நன்றி கூறி திறந்து வைத்தார்கள். மகிழ்வுடன் உட்சென்று விசுவாசிகள் ஆடிப்பாடி துதித்த பின்பு, முழங்காலில் நின்று ஆராதித்து தேவ அன்பில் நிரப்பப்பட்டதை நாங்கள் பார்த்து மகிழ்ந்தோம். எங்கள் அனைவருக்கும் தலைப்பாகை, சால்வை, மலர் மாலைகள் அணிவித்து சபையார் கௌரவப் படுத்தினார்கள். நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்த்துரைக் கூறியபின்பு எங்கள் தகப்பனார் **திரு. அற்புதராஜ் சாமுவேல்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை வழங்கினார்கள். தொடர்ந்து **பேராயர் V. தேவதாஸ்** அவர்கள் சிறப்பு ஈஸ்டர் செய்தியை வழங்கினார்கள்.

பின்பு சபையார் உற்சாகமாக காணிக்கை வழங்கினார்கள். எங்கள் குடும்பங்களுக்காக ஸ்தல போதகர் ரமேஷ் டாமோர் அவர்கள் ஜெபித்தார்கள். வந்த அனைவரின் ஆசீர்வாதத்திற்காக ஒவ்வொருவருக்காக பேராயர் அவர்கள் ஜெபித்தபோது தெய்வீக சுகம், விடுதலை மற்றும் ஆசீர்வாதங்களையும் பெற்றார்கள்.

விசுவாசிகள் அனைவருக்கும் ஆலய பிரதிஷ்டையை முன்னிட்டும், உயிர்த்தெழுந்த திருநாளை முன்னிட்டும் 2 ஆடுகள் வெட்டி சாப்பாடு வழங்கினார்கள். அவர்கள் வீடு, வசதிகள், சாப்பாடு செய்த முறைமைகள், கொடுத்த முறைமைகள் எல்லாம் எளியமுறைகள். ஆச்சரியமாக இருந்தது. இவர்கள் பயன்படுத்தும் வில், அம்புகள் மற்றும் கலாச்சார பொருட்கள், நகைகள் போன்றவற்றைப் பார்த்து மனமகிழ்ந்தோம். இறுதியில் விடைபெற்று திரும்பினோம். பணித்தளத்திற்கு வந்த நம்முடைய இன்னொரு வாகனம் பழுதடைந்து மாலை பொழுதடையும் வரை மீட்க முடியாமல் இருந்ததைக் கண்டபோது பயம், திகில் ஏற்பட்டது. எந்தவித பாதுகாப்பு, வசதிகள் இல்லாமல் எப்படி **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பமாக 23 வருடத்திற்கு முன்பு ஊழியம் செய்திருப்பார்கள் என்பதை நினைத்து தேவன்தான் இவர்களுக்கு பாதுகாப்பு என்று நினைத்து துதித்தோம்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் நம் தேசத்தில் 3 மாநிலங்களில் 7000 கிராமங்களிலிருக்கும் 1 கோடி பீல் மக்களுக்கு சுவிஷேசம் அறிவிக்க தரிசனம் அழைப்பு பெற்ற அன்பு பேராயர் **V. தேவதாஸ்,** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் குடும்பம், உடன் ஊழியர்கள், மற்றும் 500 பீல் சுதேச ஊழியர்களும் தேவனுக்காக வைராக்கியத்துடன், உண்மையாக ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த ஷாலோம் ஊழியங்களை நாம் அதிகமாய் ஜெபித்து தாங்குவதோடு மட்டுமன்றி ஊழியங்களை நிதி உதவியால் தாங்கவும், ஆலயங்களை கட்டிக் கொடுக்கவும் முன்வருவோம். **தேவனுக்கே மகிமை! அல்லேலூயா!!**

## சென்னை வட்டார முன்னேற்றப் பணிகள்

தேவகிருபையால் 21.04.2013 அன்று மாலை **M.C.C மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியில்** அனைத்து ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு மிஷனெரி கூடுகையில் மிஷனெரி பணித்தள சாட்சியும், சிறப்புச் செய்தியும் கொடுக்க தேவன் கிருபைச் செய்தார். அநேகர் நமது ஷாலோம் சுதேச ஊழியர்களை தாங்க முன்வந்தார்கள்.

நம் ஷாலோம் பணிக்களுக்காக பிரதிநிதியாக செயல்படும் ஆசிரியர் **சகோதரி. கிறிஸ்டினா** அவர்களுக்காக தேவனை துதிக்கிறேன். குறிப்பாக பள்ளியின் முதல்வர் அன்பு **சகோதரி. ரேவதி போன்ஸ்** அவர்கள் நம் ஊழியத்தையும், நேசித்து கொடுத்துவரும் அன்பு ஆதரவுக்காகவும் தேவனுக்கு துதி செலுத்தி அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

மேலும் 21,22,23 ஆகிய நாட்களில் சென்னை தண்டயார்பேட்டை, நேதாஜிநகர் CSI ஆலயத்தில் நடைபெற்ற லெந்து நாட்கள் சிறப்பு கன்வென்ஷன் கூட்டங்களில் **நானும்,** என் மனைவி **வஹிதாவும்** செய்திகளை கொடுக்கவும், மிஷனெரி பணிகளை குறித்து பகிர்ந்துகொள்ளவும் தேவன் கிருபைச் செய்தார். அநேகர் ஊழியங்களை தாங்க முன்வந்துள்ளார்கள். சிறப்பாக ஒழுங்கு செய்த **DS குரூப் குடும்பத்தாருக்காக** விசேஷமாக அன்பு **சகோ. ஜெயசிங்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்.

26.03.2013 செவ்வாய்கிழமை சென்னை துதி சபையின் அன்பு போதகரும், என் அன்பு சகோதரருமான **பாஸ்டர். ஸ்டீபன் ஜோஸ்வா** அவர்கள் தங்கள் சபை சுற்றுவட்டார போதகர்களை அழைத்து ஷாலோம் ஊழிய அறிமுக கூடுகை நடத்தினார்கள். மிக ஆசீர்வாதமாக அமைந்தது. கலந்துக் கொண்ட போதர்களில் அநேகர் ஆத்தும பாரத்துடன் ஊழியங்களை தாங்க முன்வந்தார்கள். தேவனுக்கே மகிமை. அன்பு போதகர் **ஸ்டீபன் ஜோஸ்வா** அவர்களுக்கு என் நன்றியை தெரிவிக்கிறேன்.

தொடர்ந்து சென்னை முன்னேற்ற பணிகைள முன்நின்று நடத்திவரும் **சகோ. கார்த்திகேயன்** அவர்களுக்காகவும், உடன் ஊழியம் செய்யும் **சகோ. ஜேசுராஜ், சகோ. ஸ்டாலின்** அவர்களுக்காக ஜெபியுங்கள். சென்னை வாழ் ஜெப ஆதரவாளர்கள் ஊழியக்காரியங்களுக்காக கிளை அலுவலக முனனேற்றப்பணி ஊழியர்களை அணுகவும்.

இந்தக் கடைசி நாட்களில் தேவனுடைய வருகைக்கு முன்பதாக முழு பீல் ஆதிவாசி மக்களையும் விசுவாசத்திற்குள் கொண்டுவர தொடர்ந்து ஜெபித்து நமது வருமானத்தில் ஒரு பங்கினை இந்த ஷாலோம் மிஷன் ஊழியங்களுக்காக கொடுத்து உதவிடுவோம். இதன் பலனை கர்த்தர் கண்டிப்பாக பரலோக இராஜ்ஜியத்தில் உங்களுக்குக் கொடுப்பார்.

---

**சென்னை கிளை அலுவலக முகவரி**


**Bro. R. Karthikeyan**
**Shalom Development Office**
No. 102/II Main Road, Sathya Nagar, Padi, Chennai - 600 050
Phone: 044 : 3192246, Cell : 8144275468

## மிஷனெரிப் பிரதிஷ்டை ஆராதனை - 17.03.2013

<u>ராஜமணியபுரம், ஆறுமுகநேரி</u>

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக! தேவ கிருபையால் கடந்த 17.03.2013 ஞாயிறு அன்று மாலை ஆறுமுகநேரி, ராஜமணியபுரம் **CSI தூய திரித்துவ ஆலயத்தில்** வைத்து மிடிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியைய **YMCA குழுவினர்** ஏற்பாடு செய்திருந்தனர். பாடல் மற்றும் ஆராதனை பகுதியினை **சகோ. சுந்தர்சிங்** மற்றும் **சகோ. நவ்ராஜ்** ஆகியோர் நடத்தினார்கள். தேவ செய்தியினை **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் வழிங்கியதோடு, மத்தியப்பிரதேசத்திலிருந்து கடந்து வந்திருந்த மிஷனெரி **சகோ. பிரகாஷ் வாசுனியா** அவர்கள் பகர்ந்த சாட்சியினை மொழியாக்கமும் செய்து, நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து இந்த சபை குருவானவர் **Rev. ஜேசு தாசன்** அவர்கள் தலைமையிலும், பல தேவ தாசர்கள் முன்னிலையிலும் சுதேச ஊழியர் **சகோ. பிரகாஷ் வாசுனியா** குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

கர்த்தர்தாமே பிரதிஷ்டை செய்யப்பட்ட மிஷனெரியையும், மிஷனெரியைத் ஜெபித்துத் தாங்கும் **YMCA** குழுவையும், இந்த ஆராதனைக்கு வாய்ப்பளித்த ஆலய குருவானவர் மற்றும் ஆலய உபதேசியார் **சகோ. திலகர்** ஆகியோரையும் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - 07.04.2013

<u>பயணம்</u>

தேவ நாமம் மகிமைப்படுவதாக! கர்த்தருடைய தயவினால் கடந்த 07.04.2013 ஞாயிறு அன்று பயணம் CSI தேவாலயத்தில் வைத்து காலை ஆராதனையுடன் தொடர்ந்து மிஷனெரிப் பிரதிஷ்டை நடைபெற்றது. இதில் மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலிருந்து வந்திருந்த நமது ஷாலோம் மிஷனெரிகள் சாட்சி பகர **சகோ. டேவிட்** அவர்கள் மொழிப் பெயர்ப்பு செய்தார். பின்பு சேகர குருவானவர் **Rev. வில்லியம் தாமஸ்** அவர்கள் தலைமையிலும், சபை குரு **Rev. விஜயக்குமார்** அவர்களின் முன்னிலையிலும் மிஷனெரிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.

பயணம் CSI தேவாலய சேகர குருவானவர், சபைகுரு ஆதரவாளர்கள் மற்றும் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த ஷாலோம் செயற்குழு உறுப்பினர் **சகோ. K. சுந்தர்ராஜ்** ஆகியோரை தேவன் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

**பிரதிஷ்டை செய்யப்பட்ட மிஷனெரிகள் மற்றும் ஆதரவாளர்கள்:—**

1. **சகோ. தீபக் L. பாபோர்** – **Mr. K. சுந்தர்ராஜ் குடும்பம்**
   டிப்ரி, இராஜஸ்தான் — பயணம்
2. **சகோ. கல்சிங் பார்கி** – **Mr. ஜோன்ஸ் டீக்கனார் குடும்பம்,**
   டிப்ரி, இராஜஸ்தான் — பயணம்



# வேத வினாப் போட்டி

**பதில் எழுதுக :**

1. பூர்வ நதி எது?
2. உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது சொன்னது யார்?
3. தேவனுக்கேற்கும் பலிகள் எவை?
4. யார் விவேகி என்னப்படுவான்?
5. ரூபவதியும் பார்வைக்கு அழகானவளு–மாயிருந்தவள் யார்?
6. வேதப்பிரமாணத்தின்படியே பக்தியுள்–ளவன் யார்?
7. ஆசீர்வாதம் கூறப்படும் மலை எது?
8. பரம அழைப்புக்கு பங்குள்ளவர்கள் யார்?
9. இதுமுதல் பாக்கியவான்கள் யார்?
10. எதினாலே ஆவி முறிந்து போகும்?

**நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.05.2013**

**குறிப்பு :**

வேதவினா போட்டியில் பங்குபெறுவோர் கண்டிப்பாக அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரின் சந்தாதாரராக இருக்க வேண்டும்.

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினார் (வெளி. 16, 5:10)
2. மனுஷகுமாரனுக்கொப்பானவர் (வெளி. 1:13,18)
3. இருபத்து நான்கு மூப்பர்கள் (வெளி. 4:4)
4. சர்தை (வெளி. 3:4)
5. தியத்தீரா (வெளி. 2:18, 19)
6. ஆட்டுக் குட்டியானவர் (வெளி. 5:7)
7. யேசபேல் (வெளி. 2:20)
8. பெர்கமு (வெளி. 2:12,13)
9. ஏழு சபைகள் (வெளி. 1:20)
10. பத்மு தீவிலே (வெளி. 1:9)

**கடந்த மாத வேத வினாப் போட்டியில் சரியான விடையினை சரியான நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 16 பேர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. சகோதரி. D. சுகந்தி,** தூத்துக்குடி. **2. சகோதரி.** ரமலா **S.** பாபு, நாகர்கோவில்

**3. சகோ. அபிஷேக் கார்ட்சன்,** மார்த்தாண்டம்

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**


**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**சகோ. பாபு L. டாமோர்** **நன்டுகான்**

சாத்தானின் பிடியில் சிக்கி பாதிக்கப்பட்ட சகோ. ரமன்பாய் அவர்களுக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. ரமேஷ் நினாமா** **வரம்கேடா**

அனில்பாய் என்ற சகோதரன் காய்ச்சலினால் அவதிப்பட்டார். பல மருந்துகள் சாப்பிட்டும் குணமாகவில்லை. இறுதியில் இவர் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்து ஆலயத்திற்கு வந்து ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார்.

வயிற்று வலியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்த சகோதரி காளிபேன், ஜெபத்தின் மூலம் சுகத்தினைப் பெற்றார்.

**சகோ. கால்சிங் J. நிசார்த்தா** **காமெடி**

பல மாதங்களாக கை, கால் வலியினால் சகோ. ராவ்ஜிபாய் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். அவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

சகோதரி சங்கு பேன் அவர்களுக்கு இருந்து வந்த இடுப்பு வலி ஜெபத்தின் மூலம் நீங்கியது.

**சகோ. ராமு K. ஹத்திலா** **ரீசும்ரா**

சஞ்சய் என்ற சகோதரருக்கு பயங்கர நெஞ்சு வலி ஏற்பட்டது. பல மருந்துகள் சாப்பிட்டும் குணமாகவில்லை. இயேசுவின் மீது நம்பிக்கைக் கொண்டு ஜெபிக்கவே அதிசயமாய் தேவன் சுகம் தந்தார்.

சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்த ஜெகன்பாய் என்ற சகோதரருக்காக ஜெபித்த போது சுவாசத் தடைகளை தேவன் மாற்றினார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**சகோ. மால்சிங் மெய்டா** **பான்டாகாபாட்**

ஜோகுடி என்ற சகோதரி கை கால் வலியினால் சிரமப்பட்டு வந்தார். அவருக்காக ஜெபிக்கவே கர்த்தர் நல்ல சுகத்தினைக் கொடுத்தார்.

**சகோ. பால் முனியா** **கேடாவாடா**

முன்னிபேன் என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி ஏற்பட்டு வேதனையில் கஷ்டப்பட்டு வந்தார். ரூ. 50,000/– வரை செலவு செய்தும் நோய் தீரவில்லை. கடைசியாக இயேசு கிறிஸ்துவை நோக்கி ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தினைக் கொடுத்தார்.

**சகோ. வால்சிங் M. சாரேல்** **ஹக்வானி**

ஹக்ரிபேன் என்ற சகோதரிக்கு கை மற்றும் காலில் எரிச்சல் ஏற்பட்டு அவதிப்பட்ட நிலையில் ஜெபித்தபோது தேவன் வேதனையை நீக்கினார்.

**சகோ. கண்ணுசிங் B. புரியா** **பிப்ளிபாடா**

கமலா என்ற சகோதரி பயத்தினால் கஷ்டப்பட்டார். அடிக்கடி உள்ளத்தில் பயம் ஆட்கொண்டது. மந்திரவாதிகளிடம் சென்றபோதும் நீங்காத பயம் இயேசுவை நோக்கிக் ஜெபித்த போது பூரண விடுதலை கிடைத்தது.

**சகோ. ஹசேிங் T. தாமார்** **செஜ்ஹாவ்**

அனில்பாய் என்ற சகோதரருக்கு மூக்கில் இரத்தம் வந்தது. விசுவாசத்துடன் ஜெபித்த போது தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**சகோ. துலேஷ்வர் கராசியா** **ஹெய்ஜா மொஹ்ஜி**

தினமும் குடித்துவிட்டு தபி பேன் என்ற சகோதரியின் கணவர் சண்டை போட்டு வந்தார். இவருக்காக ஜெபித்தபோது இயேசு கிறிஸ்து விடுதலையைக் கொடுத்தார்.

லல்லி பேன் என்ற சகோதரியின் கணவருக்கு தேவன் கை கால் வலியிலிருந்து நல்ல சுகம் தந்தார்.

**சகோ. ஹர்திங் B. மேடா** **பார்தியா**

தினேஷ் என்ற சகோதரர் பல வருடங்களாக தேவதைகளை வணங்கி வந்தார். இதனால் சாத்தானின் பிடியில் அகப்பட்ட இவர் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஜெபித்த போது அற்புத சுகம் பெற்றார்.

**சகோ. பாதர் D. டோடியார்** **பேடவ்நாதா**

சாத்தானின் பிடியில் பாதிக்கப்பட்ட தான்ஜி என்பவருக்கு தேவன் ஜெபத்தின் மூலம் விடுதலை கொடுத்தார்.

பல நாட்களாக வியாதிப்பட்டு விடுதலையின்றி தவித்த சிறுமிக்காக, அவரது வீட்டிற்குச் சென்று ஜெபித்த போது தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மான்சிங் K. கராசியா** **நானிசென்ட்**

ஹவ்லா என்ற சகோதரர் வாந்தி, வயிற்றுப் போக்கு வியாதியில் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலை கொடுத்தார்.

சாத்தானின் பிடியிலிருந்து மன்சா என்பவருக்கு தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. சாவூல் H. டோடியார்** **காளியாபீத்**

அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்ட ராஜீபேன் சகோதரிக்காக ஜெபித்த போது தேவன் நல்ல சுகம் கொடுத்தார்.

கேன்சர் வியாதியினால் கஷ்டப்பட்ட கமலா என்ற சகோதரிக்காக ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார்.

**சகோ. சுரேஷ் பாரியா** **பாவ்கா கூட்டா**

8 மாதங்களாக தலைவலியினால் கஷ்டப்பட்டு வந்த காளிபேன் என்பவருக்காக ஜெபித்த போது கர்த்தர் விடுதலையைக் கொடுத்தார்.

தாஜ்ஹிங் என்ற சகோதரர் 4 வருடங்களாக வயிற்று வலியினால் பெரும் அவதிப் பட்டு வந்தார். மந்திவாதிகளிடம் சென்றும் எந்தப் பயனும் இல்லாமல் இறுதியில் ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தினைக் கொடுத்தார்.

**சகோ. மனோஜ் J. மேடா** **பொட்டேலியா**

கை, கால் வலியினால் தொடர்ந்து சிரமப்பட்டு வந்த நகாட்டிபேன் என்ற சகோதரருக்கு தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார்.



## *மிஷனெரித் தரிசனக் கூட்டங்கள்*

கர்த்தருக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே! தேவ ஊழியர்களே! ஷாலோம் மிஷன் சார்பாக உங்களை வாழ்த்துகிறோம். உங்களது சபைகளில் நடக்கும், உபவாசக் கூடுகை, முழு இரவு ஜெபங்கள், ஜெபக்குழுக்களின் மூலமாக நடக்கும் பல்வேறு கூட்டங்கள் மற்றும் திருச்சபை ஆராதனைகள், மிஷனெரி வீடியோ படக்காட்சிகள் போன்றவற்றை எந்த சபைப் பாகுபாடுமின்றி உங்கள் மத்தியில் கடந்து வந்து தேவ ஆசீர்வாதத்துடன் நடத்தித் தர ஆயத்தமாயிருக்கிறோம்.



இது நிச்சயம் உங்களுக்கும் நீங்கள் செய்து வரும் தேவ ஊழியங்களுக்கும் மிக ஆசீர்வாதமாக இருக்கும். மேலும் நாங்கள் காண்பிக்கும் மிஷனெரி வீடியோ படக்காட்சிகள் உங்களின் சபை மக்களுக்குள் ஆத்துமப் பாரத்தினைக் கண்டிப்பாக உண்டாக்கும். ஜெபித்து எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

தொடர்புக்கு : **சகோ. சாம் குணசீலன்,** செல் : 09345675468

**திருத்தம்** கடந்த ஏப்ரல் மாத இதழில் பின்பக்க அட்டை உள்பக்கத்தில் வெளியிடப்பட்ட **பனதா** கிராம ஆலய அறிக்கையில் ஆதரவாளர் **சகோ. T. ஜெயசிங்,** விரிகோடு அவர்களுக்குப் பதிலாக **Pr. ஆமோஸ்** A.G. சபை மார்த்தாண்டம் என தவறுதலாக அச்சிட்டுவிட்டோம் என்பதைத் தெரிவிக்கிறோம்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

## Yôd Ï jRjR BºoYôR ù_Td áÓûL

| | |
|---|---|
| நாள் : **02.05.2013 (வியாழன்)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் | நேரம் |
|---|---|
| **18.05.2013 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 11.59 மணி வரை (24 மணிநேரம்)** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **11.05.2013, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |


*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

மிஷனெரி முன்னோடிகள்



# _ôow ¡ùWuùTp

*"ஆப்பிரிக்க மிஷனெரி"*

ஜார்ஜ் கிரென்பெல் இங்கிலாந்து தேசத்தில் பாப்திஸ்டு சபையைச் சேர்ந்தவர். தன் துணிச்சலான பிரயாணத்தின் மூலம் ஆப்பிரிக்காவில் அநேகப் புதுநிலப்பரப்புகளை கண்டுபிடித்தவர். முதல் 3 ஆண்டுகள் கேமரூனிலும் 29 ஆண்டுகள் காங்கோவிலும் ஊழியம் செய்தார்.

ஜார்ஜ் கிரென்பெல் இங்கிலாந்து தேசத்தில் கார்னல் என்ற இடத்தில் 21–08–1849ல் பிறந்தார். இவருடைய தகப்பனார் ஒரு தச்சு வேலை செய்பவர். இவர் 3 வது வயதில் தன் பெற்றோரோடு பர்மிங்கம் என்ற இடத்தில் குடியேறினார். அங்குள்ள எட்வர்டு ராஜா பள்ளியில் படித்தார். ஒய்வு நாள் பள்ளிக்குச் தவறாமல் சென்றார். 10வது வயதில் டேவிட் லிவிங்ஸ்டன் எழுதிய புத்தகத்தைப் படித்து, அதிலுள்ளப் படங்களைப் பார்த்ததும், ஆப்பிரிக்கா போய் ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஆவல் முளைத்தெழும்பியது. அவரைப் போலவே ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்ய ஆசைப்பட்டார். இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவின் மத்தியில் உள்ள காங்கோ என்ற பகுதியில் வாழும் கறுப்பு இனமக்கள் மூடநம்பிக்கை இருளில் மூழ்கித் தவித்தனர். அழிந்து போகும் ஆத்துமாக்களை இருளிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டுவர, இரட்சிப்பின் சுவிசேஷ ஒளியைக் கொண்டுபோவதே தன்னுடைய முழுவேலை என்று ஜியார்ஜ் உணர்ந்தார்.

இங்கிலாந்தில் 1859ம் ஆண்டு நடந்த எழுப்புதலின் பின்விளைவால் ஏற்பட்ட ஆத்தும அறுவடையின் போது, ஜியார்ஜ் கிரென்பெல் தன் 15வது வயதில் முழுவதுமாக மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து ஞானஸ்நானம் பெற்றார். 15வது வயதில் பள்ளிப்படிப்பை முடித்து, ஒரு இரும்பு கம்பெனியில் சேர்ந்து தொழில் பயின்றார். அப்போது நடந்த கோரவிபத்தில் ஒரு கண்ணை இழந்தார். 24வது வயதில் அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு, இங்கிலாந்தில் உள்ள பாப்திஸ்டு கல்லூரியில் சேர்ந்தார்.

ஒய்வு நாட்களில் காலை முதல் மாலை வரை நடக்கும் ஏழு ஆராதனைகளிலும் ஜெபங்களிலும் பங்கு பெற்றார். இடைவேளைகளில் சுவிசேஷக் துண்டு பிரதிகளைக் கொடுத்து மகிழ்ந்தார். ஆர்வமுள்ள வாலிபர்களோடு சேர்ந்து அயராது உழைத்தார். இவ்வளவு களைப்பிலும சோர்ந்து போகாமல், ஒவ்வொரு திங்கள் காலையிலும் போதகர் இல்லம் சென்று கிரேக்க மொழியையும் பரிசுத்த வேதாகமத்தையும் கற்றுத் தேறினார். சிங்கத்தைப் போலப் பலமும் பெண்களைப்போல அன்பாகவும் பக்திமானாகவும் திகழ்ந்தார். 25வது வயதில் சுவிசேஷப்பணியை ஆரம்பித்தார். கேமரூனிலிருந்து விடுமுறைக்கு வந்திருந்த மிஷனெரி ஆலிபிரட்சாகர் கொடுத்த விவரங்களைக் கேட்டு, ஜியார்ஜ் கேமரூனில் போய்ச் சேர்ந்தார்.

ஆப்பிரிக்கா ஓர் இருண்ட கண்டம் என்றும் அது வெள்ளைக்காரர்களின் கல்லரைத்தோட்டம் என்றும் மோட்சத்திற்குப் போகும் குறுக்குப்பாதை என்றும் அழைக்கப்பட்டது. ஜார்ஜ் அந்த கறுப்பு இனமக்களிடம் குற்றம் குறைகறைக் கண்டுபிடிக்காமலும் அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தாமலும் அன்போடும் பண்போடும் நடந்து அவர்களுக்கு சேவை செய்து, எப்படியாவது அவர்களை மிருகக் குணங்களிலிருந்து விடுதலைப் பெற்ற தேவப்பிள்ளைகளாக வாழ வைக்க ஆசைப்பட்டார். அங்கே மரிக்கவும் ஆயத்தமாக இருந்தார். 27வது வயதில் இங்கிலாந்து பெண் மிஸ் காக்ஸ் ஐ மணந்தார். ஆனால் 28வது வயதில் தன் அன்பு மனைவியை பேறுகால நேரத்தில் இழந்தார். பின் 29வது வயதில் ரோசனா என்ற ஆப்பிரிக்கப் பெண்ணை மணந்தார். அவருடைய துணிச்சலான பிரயாணங்களில் அவர் மனைவி பேருதவியாக இருந்தார்கள்.

காங்கோ துன்மார்க்கம் நிறைந்த இடம். மாந்திரிகம், விபச்சாரம், நரமாமிசம் , சாப்பிடுதல் அடிமைத்தனம், கொள்ளை, உயிரோடு புதைத்தல் மற்றும் கொடூரத் தண்டனை போன்ற ஆறுவகைப் பாவங்களில் மக்கள்படும் வேதனையைக் கண்டார். ஜார்ஜ் அவர்களுடைய மதக்கலாச்சாரப்படி நடந்து, துன்மார்க்க சீரழிவினால் சித்திரவதைப் படுவதைக்கண்டு ஜார்ஜ் வேதனைப்பட்டார். பிரமுகர் யாராவது மரித்தால், உடனே அவருடனே கூட மற்ற அடிமைகளையும் கொன்று புதைத்து விடுவார்கள். நரமாமிச விருந்து வைத்து, அடிமைகளைக் கொன்று சாப்பிட்டனர். ஒரு மனிதன் தன்னுடைய ஏழு மனைவிகளையும் சாப்பிட்டுள்ளான். கொடூர பழக்க வழக்கங்களால் பாதிக்கப்பட்ட மனிதர்களின் கதறல் ஜார்ஜ் உள்ளத்தை வாட்டியது. ஜார்ஜ் அவர்களோடு தங்கியிருக்கும் போது அந்தப் பழக்கங்கள் குறைய ஆரம்பித்தன.

பெண்களை நாய்க்கூண்டில் அடைத்து சித்ரவதைப் பண்ணுவதும் , குற்றவாளிகளை கம்பத்தில் சேர்த்துக் கட்டி துன்புறுத்துவதும் ஜார்ஜ் உள்ளத்தை நொறுக்கியது. மனித கழுகுகள் என்று அழைக்கப்பட்ட ஒரு வகை மக்கள் இறந்து போன சடலத்தை அநேக நாட்கள் வைத்திருந்து, பச்சையாக உண்டு வந்தனர். யோவான் 3:16 வசனத்தை தன் நங்கூரமாகக் கொண்டு, காங்கோவில் அயராது உழைத்தார். ஒரு சமயம் இவர் பிரயாணம் பண்ணின நீராவிக் கப்பலை ஐம்பது சிறியப் படகுகள் வந்து முற்றுகையிட்டு அம்புகளையும் ஈட்டிகளையும் எறிந்து தாக்கினர்.

பின் காலத்தில் அந்த காங்கோ மத்தியில் ஓடும் காங்கோ நதியில் நீராவிக் கப்பலில் பயணம் செய்தபோத, அந்த இடத்தில் இருந்த அந்த மக்களின் ஈட்டிகளையும் அம்புகளையும் ஜியார்ஜ் எடுத்துச் சென்றார். ஆப்பிரிக்காவில் அநேகப் புதுப்புது நிலப்பரப்புகளையும காங்கோ நதியில் வந்துசேரும் உபநதிகளையும் கண்டுபிடித்து வரைபடம் கொடுத்ததால், ஜார்ஜ் கிரென்பெலுக்கு 1886ம் ஆண்டில் தங்கப்பதக்கம் கொடுத்தார்கள். காங்கோ நதியில் நீராவிகப்பலில் பிரயாணம் செய்த முதல் மிஷனெரி இவர்தான். இறுதிகாலங்களில் வியாதியின் கொடுமை ஒரு பக்கம் இருந்தாலும் அநேக கறுப்பு இனமக்களால் கிடைத்த ஆத்தும ஆதாய மகிழ்ச்சி மறுபக்கம் இருந்தது.

53வது வயதில் 1902ல் Bolobo என்ற புத்தகம் எழுதினார். அதில் அறுவடை ஏராளம் என்றும் ஆவியானவர் கிரியை செய்துவருகிறார் என்றும் எழுதினார். காங்கோ நதியில் பயணம் செய்யும் போது, அநேக மாற்றங்களை கறுப்பார்கள் மத்தியில் கண்டு மகிழ்ந்தார். பாவங்கள் பரவலாகக் குறைய ஆரம்பித்தது. அவர்கள் வாழ்க்கையில் ஜீவஒளி பிரகாசிக்க ஆரம்பித்தது.

அன்பும் தன்னலமற்ற சேவையுமே கிறிஸ்தவ ஊழியத்தின் வெற்றியின் ரகசியம் என்றார். காங்கோவில் பிரிண்டிங் பிரஸ் ஒன்றை நிறுவினார், செங்கல் செய்ய மக்களுக்கு கற்றுக் கொடுத்தார்.

கடைசியில் இரத்தவாந்தி காய்ச்சல் தாக்கியது. 1–7–1906ல் கறுப்பு இனமக்கள் தன்னை சுற்றி சூழ்ந்து நிற்க, இயேசு என்னுடையவர் என்ற கடைசி வார்த்தை சொல்லி, தனது 57 வது வயதில் நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்தார்.

## *ஷாலோம் மிஷனெரி ஊழியப் பகிர்வு*

### *தைலாபுரம் CSI ஆலயம்*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக! நடந்த 14.04.2013 ஞாயிறு காலை தைலாபுரம் CSI தேவாலயத்தில் நடந்த ஆராதனையில் அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலக ஊழியர் **சகோ. S. ஆலன் எல்விஸ்** அவர்கள் கலந்து கொண்டு, தேவ செய்தியினைக் கொடுத்ததுடன் நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விளக்கிக் கூறினார்.

### *அகப்பைகுளம் CSI ஆலயம் & நெய்விளை CSI ஆலயம்*

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு ஸ்தோத்திரம்! கடந்த 14.04.2013 ஞாயிறு காலை 9.30 மணிக்கு அகப்பைகுளத்தில் CSI தேவாலயத்தில் நடந்த ஆராதனையில் அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலக ஊழியர் **சகோ. S. சாம் குணசீலன்** அவர்கள் கலந்து கொண்டு, தேவ செய்தியினைக் கொடுத்ததுடன் நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விளக்கிக் கூறினார். அதன்பின் நெய்விளை CSI தேவாலயத்தில் கலந்து கொண்டு தேவ செய்தியளித்ததுடன் நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்.

### *புதுக்கோட்டை CSI ஆலயம்*

தேவனுக்கே மகிமை உண்டாவதாக! கடந்த 14.04.2013 ஞாயிறு காலை புதுக்கோட்டையிலுள்ள CSI பிரசன்ன தேவாலயத்தில் நடந்த ஆராதனையில் அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலக ஊழியர் **சகோ. டேவிட்** அவர்கள் கலந்து கொண்டு, தேவ செய்தியினைக் கொடுத்ததுடன் நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விளக்கிக் கூறினார். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை குருவானவரை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!

ஷாலோம் ஊழியங்களைக் குறித்து சபைகளில் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த சபைக் குருவானவர்கள் **Rev. S. எட்வின் ஜெபராஜ், Rev. கிங்ஸ்லி டேனியேல், Rev. T.O.M. கோல்டுவின்** மற்றும் சபை ஊழியர் **சகோ. நெய்விளை ஜெபராஜ், சகோ. நெல்சன்** போன்றோர்களுக்கு ஷாலோம் மிஷன் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

## *ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!*

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, வருகின்ற 04.05.2013 சனிக்கிழமை இரவு 9.00 மணிக்கு தூத்துக்குடி V.G.S. பள்ளியில் **தூத்துக்குடி முழு இரவு ஐக்கியத்தின்** மூலமாக நடைபெறும், முழு இரவு ஜெபத்தில் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளிக்கிறார்கள். இதற்காக அனைவரும் ஜெபித்து, இந்தக் கூட்டத்தில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்றுக் கொள்ளும்படியாக அன்புடன் அழைக்கிறோம்.

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப....***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

கடந்த ஏப்ரல் மாதம் ஈரானின் தென்கிழக்குப் பதியில் பாகிஸ்தானுடனான எல்லை அருகே 7.8 புள்ளிகளிகன் அளவுக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று தாக்கியுள்ளது. மிகவும் ஜன நெருக்கடி மிகுந்த சிஸ்டான் பலுசிஸ்தான் மாகாணத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நில நடுக்கத்தினால் பல உயிர் சேதமும், அநேக பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலநடுக்கம் இந்திய தலைநகர் புது டெல்லி தவிர ஜெய்ப்பூர், சண்டிகர், அகமதாபாத் போன்ற நகரங்களிலும் உணரப்பட்டது.

நம்முடைய தோலுக்கு அடியில் பொருத்தப்படுகின்ற சிறு கருவி மூலம் நம்முடைய இரத்தப் பரிசோதனை முடிவுகளை உடனுக்குடன் கைத் தொலைபேசியில் பார்க்க வகை செய்யும் கண்டுபிடிப்பு ஒன்றை தாம் செய்துள்ளதாக சுவிட்சர்லாந்து விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அரை அங்குலம் நீலமும் தீக்குச்சியின் தடிமனுமே கொண்ட இக்கருவியின் மாடல் ஒன்றை சுவிட்சர்லாந்து விஞ்ஞானிகள் தற்போது உருவாக்கியுள்ளனர். நமது உடலில் உள்ள இரத்தத்தில் கொழுப்பு, இனிப்பு போன்றவற்றின் அளவு ஆகியவற்றோடு மருத்துவர்களுக்குத் தேவைப்படும் வேறு சில உட்கூறு அளவுகளையும் கண்டறியும் வல்லமை இந்த சிறு கருவிக்கு உண்டு.

கடந்த ஏப்ரல் மாதம் கர்நாடகா மாநிலத்தின் தலைநகரான பெங்களூர் மல்லேஸ்வரம் பகுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 13 பேர் காயமடைந்தனர். ஒரு மோட்டார் சைக்கிளில் குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என போலீசார் கூறுகின்றனர். குண்டு வெடித்தபிறகு அந்த இரு சக்கரவாகனம் முற்றிலுமாக சிதைந்திருந்தது.

இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்பட்ட பிரிட்டனின் மறைந்த முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சரின் இறுதி ஊர்வலம் லண்டனில் கடந்த மாதம் 17ம் தேதி நடைபெற்றது. பூதவுடல் பயணிக்கும் வழிநெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்களும் ஆயுதந்தாங்கிய படையினரும் வரிசையில் நின்று, கவலையுடன் பார்வையிட்னர்.

நன்றி : www.bbc.co.uk


## எங்களுடன் தொடர்பு கொள்ள

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in   website : www.shalommission.in**



# பாண்டி சேரா மத்தியப்பிரதேசம்

பாண்டிசேரா என்ற கிராமம் மத்தியபிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் மேஹ்நகர் தாலுகாவில் குவா கிராம பஞ்சாயத்தில் அமைந்துள்ளது. சுமார் 30 கி.மீ மேக்நகர் நகரத்திலிருந்து உள்ளடங்கிய இந்த கிராமத்திற்கு உள்ளே வருவதற்கு சுமார் 6 கி. மீ நடந்து மலைகள், குன்றுகள், மேடுகள் பள்ளங்களைத் தாண்டி பிரயாணப்பட்டு வந்தடைய வேண்டும். சாராயம், திருட்டு மற்றும் அடிதடி சண்டைகள் இந்த வட்டாரத்தில் அதிகம் உண்டு. போக்குவரவு, மின்சாரம், கல்வி, சுகாதாரம், குடிநீர் என்றஅடிப்படை வசதிகள் சரிவர கிடைக்கப் பெறாத கிராமங்களில் இந்த கிராமமும் ஒன்றாகும்.

2002ம் ஆண்டு சுர்பால் பாரியா என்ற சகோதரருடைய மனைவியின் வயிற்றிலிருந்த கட்டியினால் பல வருடங்கள் வேதனைப்பட்டு மருத்துவம் செய்தும், கோழி மற்றும் ஆடுகளை பலி–யிட்டும் பலனின்றி பாண்டிசேரா கிராமத்திருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ள அமளியாமால் கிராமத்தில் உள்ள ஷாலோம் சபைக்கு வந்து ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. மத்தூர் புரியாவிடம் ஜெபித்து இயேசுவின் கிருபையினால் அற்புத விடுதலை பெற்றார்கள். தொடர்ந்து 5 குடும்பங்கள் பாண்டிசேராவில் ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்கள்.

2005ஆம் ஆண்டில் பாண்டிசேரா, மூப்பர் சகோ. ராஜ்ஹிங் அவர்கள் வீட்டில் இந்த 5 குடும்பங்களுடன் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டது. 2007ம் ஆண்டு சுதேச ஊழியர் சகோ. ரமேஷ் டாமோர் பொறுப்பு ஏற்று சபை ஊழியத்தை நடந்த ஆரம்பித்தார். தற்போது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் அற்புத அடையாளங்கள் நடைபெற சுமார் 35 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். ஆராதனை நடத்திய சிறிய வீட்டில் இடம் பற்றாக்குறை ஏற்படவே மூப்பர் ராஜ்ஹிங் தன் நிலத்தை ஆலயம் கட்ட அர்ப்பணித்தார். அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்பட ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, 31.04.2013 ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை அன்று ஷாலோம் பேராயர் V. தேவதாஸ் அவர்கள் பிரதிஷ்டை ஜெபம் செய்ய, தூத்துக்குடி மாவட்டம் குளத்துக்குடியிருப்பு சகோ. அற்புதராஜ் அவர்கள் ஆலயத்தை திறந்து வைத்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

இந்த கிராம ஆலயம் மிரியாள் குடா (ஆந்திரா மாநிலம்) என்ற ஊரைச் சேர்ந்த சகோ. தேவசகாயம் அவர்கள் குடும்பத்தார் வழங்கிய நிதி உதவி மூலமாக கட்டப்பட்டது.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 200 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

தூத்துக்குடியில்

# ஷாலோம்

# மிஷினெரி தரிசனக் கூடுகை

| நாள் | இடம் | நேரம் |
| --- | --- | --- |
| 05.05.2013<br>ஞாயிறு | A.S.K.R. திருமண மஹால்<br>புதுக்கிராமம், தூத்துக்குடி. | மாலை<br>6.00 மணி |

மிஷனெரி செய்தி

## பேராயர். V. தேவதாஸ்

ஷாலோம் ஊழியங்கள், குஜராத்


பணித்தள செய்தி

## சகோதரி. வஹிதா தேவதாஸ்

துதி ஆராதனை : **ஹெவன்லி ஜாய் ஊழியங்கள்**

கோவில்பட்டி

- மகிமையான பாடல் மற்றும் ஆராதனை...
- முரட்டாட்டமாய் வாழ்ந்த ஆதிவாசிகள் மனந்திரும்பி ஊழியர்களான சாட்சிகள்...
- 10 மிஷனெரிகளின் அர்ப்பணிப்பு...
- அனல் மூட்டும் தேவனுடைய வார்த்தை...





**சபை பாகுபாடின்றி அனைவரும் பங்கு பெற்று**
**தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம்...**

தொடர்புக்கு : –

**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468